# BODMAS

## BODMAS

செயலிகளைப்(கூட்டல்,கழித்தல்,பெருக்கல்,வகுத்தல் ) பயன்படுத்தும் போது எதை முதலில் செய்வது என குழப்பம் ஏற்படலாம் எனவே குழப்பத்தைத் தவிர்க்க செயலிகளை இடமிருந்து வலமாக வரிசைக்கிரமமாக BODMAS என்ற முறையில் பயன்படுத்தலாம்
B - அடைப்பு , O- இன் D -வகுத்தல் , M - பெருக்கல்,A -கூட்டல் S - கழித்தல்
வகுத்தல் பெருக்கலில் எது முதலில் வருகிறதோ அதை முதலில் செய்ய வேண்டும்
கூட்டல் கழித்தலில் எது முதலில் வருகிறதோ அதை முதலில் செய்ய வேண்டும்
அடுக்குக்குறி விதிகள்

a X a Xa X a X......... m முறைகள் = $a^m$
பூஜ்யமற்ற முழுக்கள் a, b மற்றும் முழு எண்கள் m , n க்கு $a^mXa^n = a^(m+n)$
$a^m \div a^n = a^(m-n)$
$a^0 = 1$
$a^mb^m = (ab)^m$
$(a/b)^m = \frac{a^m}{b^m}$

## இயற்கணித முன் ஒற்றுமைகள்

$(a+b)^2 = a^2 + 2ab + b^2$
$(a-b)^2 = a^2 - 2ab + b^2$
$(a+b)(a-b) = a^2 - b^2$
$(x+a)(x+b) = x^2 + (a+b)x + ab$
$1/2((a+b)^2 + (a-b)^2) = a^2 + b^2$
$1/4((a+b)^2 + (a-b)^2) = ab$
$(a+b)^2 - 2ab = a^2 + b^2$
$(a-b)^2 + 2ab = a^2 + b^2$
$(a+b)^2 - 4ab = (a-b)^2$
$(a-b)^2 + 4ab = (a+b)^2$
$(a+b+c)^2 = a^2 + b^2 + c^2 + 2(ab+bc+ca)$
$(a^3+b^3) = (a+b)(a^2-ab+b^2)$
$(a^3-b^3) = (a-b)(a^2+ab+b^2)$
$(a^3+b^3+c^3-3abc) = (a+b+c)(a^2+b^2+c^2-ab-bc-ac)$
$a+b+c = 0, a^3+b^3+c+c^3 = 3abc$

## சதவீதம்

சதவீதம் எனில் அதன் சதவீதம் என்பது பகுதியில் 100 உடைய பின்னம் சதவீதத்தை % என குறிக்கலாம்
x% எனில் x/100
x:y என்ற எந்த ஒரு விகிதத்திலும் y=100 எனில் அது சதவிகிதம்
ஒரு பின்னதை அல்லது ஒரு தசம எண்ணை சதவீதமாக மாற்றுவதற்கு 100 ஆல் பெருக்க வேண்டும்

## மீச்சிறு பொது மடங்கு

வெவ்வேறு எண்களின் பொது மடங்குகளில் மிகச் சிறிய மடங்கு அவ்வெண்களின் மீச்சிறு பொது மடங்கு எனப்படும்?

## மீப்பெரு பொது வகுத்தி

வெவ்வேறு எண்களின் பொது வகுத்திகளில் மிகப் பெரிய வகுத்தி அவ்வெண்களின் மீப்பெரு பொது வகுத்தி எனப்படும்

## மீப்பெரு பொது வகுத்தி மற்றும் மீச்சிறு பொது மடங்கு ஆகியவற்றிற்கு இடையே உள்ள தொடர்பு

இரு எண்களின் பெருக்கற்பலன் அவற்றின் மீப்பெரு பொது வகுத்தி மற்றும் மீச்சிறு பொது மடங்கு ஆகியவற்றின் பெருக்கலுக்குச் சமம்

## பின்னங்களின் மீச்சிறு பொதுமடங்கு, மீப்பெரு பொது வகுத்தி

பின்னங்களின் மீச்சிறு பொது மடங்கு = . தொகுதியின் மீச்சிறு பொது மடங்கு/பகுதியின் மீப்பெரு பொது வகுத்தி
பின்னங்களின், மீப்பெரு பொது வகுத்தி= தொகுதியின் மீப்பெரு பொது வகுத்தி/பகுதியின் மீச்சிறு பொது மடங்கு

## விகிதம்

விகிதம் என்பது ஒரே அலகினை உடைய இரு அளவுகளை ஒப்பிடுவது ஆகும்
a : b என்பதும் b : a என்பதும் வெவ்வேறு
a : b என்ற விகிதத்தில் உள்ள உறுப்புகள் ஒரே எண்ணின் மடங்குகளால் பெருக்கும்போது சமான விகிதங்கள் கிடைக்கும்

## விகித சமம்

இரண்டு விகிதங்கள் a : b மற்றும் c : d சமம் எனில் அவற்றை a : b :: c : d என எழுதலாம்
மேலும் இடை எண்களின் பெருக்கல் பலன் = கடைசி எண்களின் பெருக்கல் பலன் bc = ad

## வாழ்வியல் கணிதம்

## தனிவட்டி

அசலுக்கு மட்டும் வட்டி காணுதல் தனிவட்டி
தனிவட்டி=pnr/100 p அசல் n காலம்(ஆண்டுகளில்) r வட்டி வீதம் கூடுதல் தொகை = அசல் + வட்டி
365 நாட்கள் = 1 ஆண்டு
219 நாட்கள் =219/365 = 3/5 ஆண்டு
73 நாட்கள் =73/365 = 1/5 ஆண்டு
12 மாதங்கள் =1 ஆண்டு
6 மாதங்கள் =6/12 =1/2 ஆண்டு
3 மாதங்கள் =3/12=1/4ஆண்டு

## கூட்டு வட்டி

ஒவ்வொரு முறை பெற்ற வட்டியையும் அசலுடன் சேர்த்து வட்டி காணுதலை கூட்டு வட்டி என்கிறோம்
கூட்டுவட்டி முறையில் கூடுதல் தொகை $A = P(1 + \frac{r}{100})^n$
கூட்டுவட்டி = கூடுதல் தொகை - அசல்
அரையாண்டுக்கு கூட்டு வட்டி காணும் முறையில் $A = P[1 + 1/2(\frac{r}{100}]^2n$
காலாண்டுக்கு கூட்டு வட்டி காணும் முறையில் $A = P[1 + 1/4(\frac{r}{100}]^2n$
அசல் P க்கு வட்டி வீதம் r% எனில் இரண்டு ஆண்டுகளுக்கு கூட்டு வட்டிக்கும் தனி வட்டிக்கும் உள்ள வித்தியாசம் P (r/100 )^2

ஆண்டுகளுக்கு கூட்டு வட்டிக்கும் தனி வட்டிக்கும் உள்ள வித்தியாசம் P (r/100 )^2 (3+r/100)

• அசல் P க்கு வட்டி வீதம் r% எனில் m 3

## தொடர் வைப்புத்திட்டம்

தொடர் வைப்புத்திட்டம் வட்டி =$\frac{pn(n+1)r}{2X12X100}$
தொடர் வைப்பு திட்டத்தில் A= pn + I
p அசல்
n காலம்(மாதங்களில்)
r வட்டி வீதம்

## மதிப்பு கூடுதல்

மக்கள் தொகை, பாக்டீரியாவின் வளர்ச்சி , சொத்தின் மதிப்பு விலை கூடுதலாக உள்ள சில பொருட்கள் இவை அனைத்திற்கும் ஆண்டுதோறும் மதிப்புகள் கூடுகின்றன
n ஆண்டுகளுக்குப் பின் மதிப்பைக்காண A = $P(1 + \frac{r}{100})^n$ என்ற சூத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும்.
P தற்போதைய மதிப்பு
r ஆண்டு வளர்ச்சி வீதம்
n காலம் ஆண்டுகளில்

## மதிப்பு குறைதல்

சில இயந்திரங்களின் மதிப்பு , வண்டிகளின் மதிப்பு , சில பொருட்களின் விலைகள் , கட்டிடங்களின் மதிப்பு ஆகியவை ஆண்டுதோறும் குறைகின்றன
இதைக்காண A = $P(1 - \frac{r}{100})^n$ என்ற சூத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும்
n ஆண்டுகளுக்குப் பின் மதிப்பைக்காண A =$P(1 - \frac{r}{100})^n$என்ற சூத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். P தற்போதைய மதிப்பு r ஆண்டு வளர்ச்சி வீதம்,
n காலம் ஆண்டுகளில்
n ஆண்டுகளுக்குப் முன் மதிப்பைக்காண A= $\frac{P}{(1 - \frac{r}{100})^n}$என்ற சூத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். P தற்போதைய மதிப்பு r ஆண்டு வளர்ச்சி வீதம்,n
காலம் ஆண்டுகளில்